உண்மையுரைத்த உரத்த குரல்!



தலைமைக் கழக வெளியீடு

2209 தி.க.

உண்மையின் உரத்த குரல்!

(1-11-88 அன்று பண்ருட்டியில் நடந்த பொதுக் கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்களின் அறைகூவல்.)

இன்றைக்கு எல்லோரும் ஒன்றாக ஒரு விஷயத்தை பேசுகிறார்கள். அது என்ன தெரியுமா? காங்கிரஸ்காரர்கள் மேடையில் ஏறினால் அவர்கள் முதலமைச்சராக வருவதைப் பற்றி கூட அதிகமாக பேசுவதில்லை. கருணாநிதி வந்து விடக் கூடாது என்று பேசுகிறார்கள். அதைப் போல அ. தி. மு. க. வின் இரண்டு அணிகளில் ஓரணியில் உள்ள எல்லோரும் பேசுகிறார்கள். இன்னொரு அணியில் பெரும் பாலானவர்கள் பேசுகிறார்கள்.

என்ன பேசுகிறார்கள் தெரியுமா? "கருணாநிதி முதலமைச்சராக வந்துவிடக் கூடாது. தி. மு. க. ஆட்சிக்கு வந்துவிடக் கூடாது" என்று பேசுகிறார்கள்.

இவர்கள் மாத்திரமல்லாமல் இங்கே பேசிய நெல்லிக் குப்பம் கிருஷ்ணமூர்த்தி, செஞ்சி இராமச்சந்திரன், எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் குழந்தைவேலு ஆகியோர் எடுத்துக் காட்டியதைப் போல தி. மு. க. ஆட்சிக்கு வரக்

பல்கலைக்கழக நூலகம்,
தமிழ்த் "தா.சு" நினைவு இலக்கியக் கழ

கூடாது; அது எங்களுடைய முதல் எதிரி; அதிலும் குறிப்பாக கருணாநிதி எங்களுக்கு முதல் எதிரி என்று ஒரு சங்கத்தினர் பேசுகிறார்கள்.

இவர்களெல்லாம் யார்?

நான் அந்த சங்கத்தை அவர்களுடைய ஜாதியின் பெயரைச் சொல்லி குறிப்பிட விரும்பவில்லை. காரணம் அந்த ஜாதிக்காரர்கள் அனைவரும் அந்த சங்கத்திலே இல்லை. இருந்தால் குறிப்பிடுவேன். அந்த வகுப்பைச் சேர்ந்த பலர் இந்த மேடையிலே இருக்கிறார்கள். அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு தி. மு. கழகத்தின் தலைமைக்கழக செயலாளர்களாக இருக்கிறார்கள். அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் தென்னாற்காடு மாவட்டத்தின் இரண்டு பகுதிகளின் மாவட்டக் கழக செயலாளர்களாக இருக்கிறார்கள்.

தருமபுரி மாவட்டக் கழக செயலாளர், சேலம் மாவட்டக் கழக செயலாளர், செங்கை அண்ணா மாவட்டக் கழக செயலாளர் ஆகியோரெல்லாம் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் தான். இத்தனை தளபதிகளும் தி.மு.கழகத்தில் இருக்கிறார்கள் என்றால் - அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்றால் நான் நிச்சயமாக ஏமாறத் தயாராக இல்லை.

வன்னிய சமுதாய பெருமக்கள் அனைவரும் கருணாநிதிக்கு எதிரி என்று நான் நிச்சயமாக நம்பமாட்டேன். என்னை நான் ஏமாற்றிக் கொள்ள மாட்டேன். எனக்கு நம்பிக்கை உண்டு. நான் அந்த மக்களுக்கு - அவர்களுடைய அன்பிற்கு - பாசத்திற்கு - பிரிவிற்கு கட்டுப்பட்டவன். அவர்களுக்காக பணியாற்றுகிறவன் என்பதை அந்த மக்கள் நன்றாக உணர்வார்கள்.

எனக்கும் இந்த மாவட்டத்தில் இருந்த பெரியவர் மறைந்த கோவிந்தசாமி அவர்களுக்கும் இருந்த நட்பு உங்களுக்குத் தெரியாது வருகிற வழியெல்லாம் சொல்லிக் கொண்டு வந்தேன். முதன்முதலாக 1952-ம் ஆண்டில் நான் சினிமாவிற்கு கதை எழுதி அதன் காரணமாக கார் வாங்கி னேன். அந்தக் கார் புத்தம் புதிய கார். அது யாருக்குப் பயன் பட்டதென்றால், அந்தக் காரில் விக்கிரவாண்டிக்கு வந்து வளவனூர் தொகுதி முழுவதும் - இப்போது உள்ளது போலவா அப்போது சாலைகள் இருந்தன. தி மு.க. ஆட்சிக்கு வந்தபின் தான் சாலைகள் போடப்பட்டது. மலைகள்-மேடுகள்-கற் குவியல்கள் - பள்ளங்கள் இப்படி பல இடங்களில் இரவு முழுவதும் சுற்றிச்சுற்றி அன்றைக்கு 52-ம் ஆண்டு உழைப் பாளர் கட்சியினுடைய சட்டமன்ற வேட்பாளராக நின்ற ஏ. கோவிந்தசாமி அவர்களை ஆதரித்துப் பேசி விட்டு சென்றவன் தான் நான்.

அதற்குப் பிறகு தி. மு. க. ஒரு பெரும் போராட்டத்தில் ஈடுபட்ட பொழுது கோவிந்தசாமி அவர்கள்தான் தி.மு.கழகத் தினுடைய தமிழ்நாடு முழுவதற்குமான பொறுப்பாளராக அண்ணா அவர்களால் நியமிக்கப்பட்டார் அந்த கோவிந்தசாமி தான் அண்ணா அமைச்சரவையில் ஒரு முக்கிய பொறுப்பில் இருந்தவர். அந்த கோவிந்தசாமி தான் அண்ணாவின் மறை விற்குப் பிறகு என்னுடைய தலைமையிலே அமைச்சரவை அமைந்த பொழுது அதிலும் முக்கிய அமைச்சராக பொறுப்பேற்றவர்.

வன்னிய சமுதாயத்துடன்
அன்று முதல் இன்று வரை...

அவர் மறைந்த பிறகு நான் சொல்கிறேன். தமிழ் நாட்டில் முதன்முதலாக வன்னியர் சமுதாயத்திற்குரியவரான மறைந்த கோவிந்தசாமி பெயரால் ஒரு கல்லூரியை தென்னாற்காடு மாவட்டத்திலே திண்டிவனத்திலே

உருவாக்கியவன் தான் இந்த கருணாநிதி. நான் சொன்னால் அது சுய விளம்பரம் என்று எண்ணிக் கொள்ளக் கூடாது. என்னை எதிரி என்கிறார்களே அவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். அந்தப் பெரியவர் மறைந்த பிறகு அந்தக் குடும்பத்தின் விளக்குகள் எரிய வேண்டுமென்பதற்காக தி. மு க. எவ்வளவு முயற்சி எடுத்துக் கொண்டது என்பதை இந்த வட்டாரத்து மக்கள் அறிவார்கள்.

நான் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த பொழுது என்னுடைய செயலாளராக வைத்தியலிங்கம் என்ற வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான் இருந்தார்.

பிறகு நான் முதலமைச்சராக பொறுப்பேற்ற போது கூட அந்த வைத்தியலிங்கம் தான் எனக்கு தனிச்செயலாளராக இருந்தார். வன்னிய சமுதாயத்திற்கு நான் எப்படி எதிரி யாவேன்? எப்படி தி மு. க. எதிரியாக முடியும்?

அவர்கள் எது வேண்டுமானாலும் சொல்லி விட்டுப் போகட்டும். என்னை யார் வேண்டுமானாலும் எதிரி என்று சொல்லட்டும். ஆனால் என்னை யார் எதிரி என்று சொல் கிறார்களோ அவர்கள் தான் எனக்கு முதல்தரமான நண்பர்கள் என்று நான் கருதிக்கொண்டிருப்பவன். அவர்கள் எனக்கு நல்லது செய்தாலும் கெடுதல் செய்தாலும் என்னை உயிரோடு உலவவிட்டாலும் உலவாதே என்று உடனடியாக என்னை முடித்துவிட்டாலும் உயிரோடு உலவவிட்டால் மக்கள் பணி யாற்றவிட்டிருக்கிறார்கள் என்று நண்பர்களாகவே கருது வேன். இல்லை உடனடியாக முடித்து விட்டால் போதும் வாழ்வு என்று ஓய்வு கொடுத்து விட்டார்கள் என்று அப்போதும் நண்பர்களாகத் தான் கருதுவேன்.

எனவே எதிரி என்று யார் வேண்டுமானாலும் சொல்லி விட்டுப் போகட்டும். கிருஷ்ணமூர்த்தி போன்றவர்கள் ஆவேசமாக இவரையா எதிரி என்று அழைக்கிறீர்கள் என்று

கேட்டார்கள். எதிரி என்றால் பகைவர் என்று மாத்திரம் அர்த்தம் அல்ல. எதிரும் புதிருமாக அமர்ந்திருந்தாலும் கூட எதிரிதான். அப்படி எண்ணிக் கொள்வேன். இங்கே கூட சீதாபதி மேடைக்கு எதிரே அமர்ந்திருக்கிறார் ஆகையால் அவர் எதிரியா? புதுவை முத்து எதிரே அமர்ந்திருக்கிறார் அவர் எதிரியா? எதிரே அமர்ந்திருக்கிறார்கள் அவ்வளவு தான். நான் நல்லவராகத் தான் எலலோரையும் கருதுகிறேன். அவர்கள் எதிரியாகக் கருதினால் அதற்கு நான் பொறுப்பல்ல.

என்றைக்கும் வன்னியர் சமுதாயமானாலும், ஆதி திராவிடர் சமுதாயமானாலும், வேறு எந்தச் சமுதாயமானாலும் அது அழுத்தப்பட்டிருந்தால் அந்த சமுதாயத்தை கை தூக்கி விடுவதற்காக என்னுடைய கையில் வலுவுள்ள வரையில் என் அந்த வலுவை இழந்து விட்டால் கூட என் உடல் வலிவு முழுவதையும் அந்த கையிலே தேக்கி அவர்களுக்காக பாடுபடக் கூடியவன் இந்த கருணாநிதி ! அவன் பெரியாரின் தொண்டன் ! அண்ணாவின் தம்பி ! அவனுடைய ரத்தத்தில் ஊறியது பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பாடுபட வேண்டுமென்ற உணர்வு !

இன்று என்ன சொல்லி திசை திருப்புகிறார்கள்? பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் என்ற ஒரு தனி பட்டியல் உண்டு. அதைக் கருணாநிதி எடுத்து விட்டான் என்று சொல்கிறார்கள்.

மேலும் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு இருந்தது. அதாவது ரிசர்வேஷன் (Reservation) இருந்தது. உதாரணமாக மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி போன்றவைகளில் சேரவும், வேலை வாய்ப்புகளுக்கும், மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு இருந்தது. அதை கருணாநிதி எடுத்து விட்டான் என்று குற்றம் சாட்டுகிறார்கள்.

இதை மாத்திரம் நிரூபித்து விட்டால் கருணாநிதி அரசியல் பொது வாழ்க்கையிலிருந்து விலகிக் கொள்ளத் தயாராக இருக்கிறான். நிரூபிப்பார்களா?

இடஒதுக்கீடு மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இல்லை. வேறு என்ன இருந்தது என்றால் கல்விச் சலுகைகள் மாத்திரம் தான் இருந்தது. கல்விக்கான கன்செஷன் இருந்தது.

கன்செஷன் என்ற ஆங்கில வார்த்தைக்கும், ரிசர்வேஷன் என்கிற ஆங்கில வார்த்தைக்கும் வித்தியாசம் தெரியாமல் படித்தவர்கள் கூட இருப்பார்கள் என்று நான் நம்பவில்லை.

கன்செஷன் என்றால் சலுகை. ரிசர்வேஷன் என்றால் இட ஒதுக்கீடு.

இட ஒதுக்கீடு, பிற்படுத்தப்பட்டோருக்கு என்று இருந்ததே அல்லாமல் - காமராஜர் காலத்திலும் சரி - பக்தவத்சலம் காலத்திலும் சரி - அண்ணா அவர்கள் காலத்திலும் சரி - என் காலத்திலும் சரி - எம்.ஜி.ஆர். காலத்திலும் சரி-கல்விச் சலுகைகள், உபகாரச் சம்பளம் போன்றவைகளுக்கு மிகப் பிற்படுத்தப்பட்டோர் என்ற பட்டியல் உண்டே தவிர,

மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு என்பது எந்தக் காலத்திலும் இருந்ததில்லை.

என் கையில் இருப்பது 1974-ம் ஆண்டு தமிழக அரசு வெளியிட்ட புத்தகம். 16-4-74ல் தமிழக அரசு பிற்பட்டோர் நலத்துறை சார்பாக வெளியிட்ட புத்தகம் புத்தகத்தின் தலைப்பு ''முன்னேற்றப் பாதையில் பிற்பட்ட வகுப்பினர்'' என்பதாகும். இதிலிருந்து ஒன்றை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன். 1973-ஆம் ஆண்டு நான் அலகாபாத்தில் நடைபெற்ற ''அரிஜன பிற்பட்டோர் நல மாநாட்டில்'' உரையாற்ற அழைக்கப்பட்டிருந்தேன். மறைந்த ராஜ் நாராயணன்

அவர்கள் ஏற்பாடு செய்த மாநாடு அது. அந்த மாநாட்டில் கலந்து கொண்ட நான் என்னுடைய உரையை முடிக்கும் பொழுது ஒன்றைக் குறிப்பிட்டேன். ''மத்திய அரசு வேலை வாய்ப்புகளில் அரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம் ஒழுங்காக - முழுமையாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். இது ஒன்று. அது போல மத்திய அரசினுடைய வேலை வாய்ப்புகளில் இனிமேல் பின் தங்கிய மக்களுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவிறகு இவ்வளவு இடம் என்று நிர்ணயிக்கப் பட வேண்டும் அதையும் மத்திய அரசு உடனடியாக செய்ய வேண்டும்.''

மத்திய அரசில் இட ஒதுக்கீடு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வேண்டுமென்று 14-10-73லேயே அலகாபாத்தில் நடைபெற்ற உத்தரபிரதேச அரிஜன பிற்பட்டோர் மாநாட்டில் நான் பேசினேன்.

நான் பேசியது 73-ம் ஆண்டில்; 77-ல் ஜனதா ஆட்சி வந்தபொழுது மண்டல் கமிஷன் என்ற ஒன்றை நியமித்து மத்திய அரசு எந்தெந்த இடங்களுக்கு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு செய்யலாமென்பதைப் பற்றி ஆராய அந்த கமிட்டியை நியமித்தார்கள். அதுதான் மண்டல் கமிஷன் அந்த மண்டல் கமிஷன் ஆய்வு நடத்தி ஒரு அறிக்கை வெளி வந்து ஏறத்தாழ எட்டு ஆண்டுகள் ஆகின்றன. இந்த எட்டு ஆண்டுகாலமாக அந்த மண்டல் கமிஷன் அறிக்கையைப்பற்றி வாய் திறக்காத ஆட்சிதான் காங்கிரஸ் ஆட்சி. அதை நீங்கள் மறந்து விடக் கூடாது.

77-ல் மண்டல் கமிஷன் போட்டார்கள். எதற்காக? மத்திய அரசு நிறுவனங்களிலும் துறைகளிலும் பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டுமென்பதற்காக மண்டல் கமிஷன் போட்டார்கள். ஆனால் அதே கருத்தை அதற்கு நான்காண்டுகளுக்கு முன்பே சொன்னவன்தான் இந்த கருணாநிதி.

என்னை எதிரி என்று சொல்பவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதே பத்தகத்திலேயே இருக்கிறது. ''கல்விச் சலுகைகளைப் பெற ஆண்டு வருமான வரம்பு வரை யறுக்கப்பட்டு ஆரம்ப காலத்தில் ரூபாய் அறுநூறாக வரை யறுக்கப்பட்டு அவ்வப்போது உயர்த்தப்பட்டது. இன்று வரம்பு ஆயிரத்து ஐநூறாக உயர்ந்துள்ளது இவ்வரம்பிற்கு உட்பட்ட பிற்பட்ட வகுப்பு மாணவ-மாணவியர் கல்விக்கூடங் களில் சேர்ந்தவுடன் தமிழக கல்வித்துறை சட்டங்களில் 92-வது பிரிவின் கீழ் மனு செய்ய வேண்டும். மிகப் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராயின் அவர்களுக்கு முழு சம்பள சலுகை 57-58 முதல் கொடுக்கப்பட்டது. தற்சமயம் புகுமுக வகுப்பு வரை இலவச கல்வி ஆதலால் இச்சலுகையின் பயன் புகுமுக வகுப்பிற்கு மேல் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு பயனளிக் கும். சிதம்பரம் அண்ணாமலை பல்கலைகழகத்திற்கு மட்டும் இச்சலுகையால் ஏற்படும் இழப்பு இத்துறையால் ஈடு செய்யப் படுகிறது ஏனைய கல்விக்கூடங்களில் ஏற்படும் இழப்பை தமிழக அரசின் கல்வித்துறை ஈடு செய்யும்.

உண்மையை மறைப்பது ஏன் ?

இதை தி. மு. கழக ஆட்சியில் மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களைப் பற்றிய குறிப்போடு வெளியிட்டிருக்கிறோம். அது மாத்திரமல்ல இந்தப் புத்தகத்தில் நூற்றி பதினாறு ஜாதிகள் பிற்படுத்தப்பட்ட ஜாதிகள் என்று அச்சிடப்பட்டிருக்கிறது. அதிலேயே இன்னொரு தலைப்பு இந்த நூற்றி பதினாறு ஜாதிக்குள்ளேயே முப்பத்தெதான பது வகுப்புகள் மிக பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல் என்று இருக்கிறது. அதில்தான் அம்பலக்காரர், மவுண்டாலன் செட்டி, மகேந்திரநேசரா, நரிக்குறவர், வன்னியர் குல கூத்திரியர், வன்னியர், வன்னிய கவுண்டர், கவுண்டர் அல்லது கண்டர், படையாச்சி, பள்ளி உட்பட என்றெல்லாம் மிக பிற்பட்டோர் பட்டியல் என்று 74-ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சியில் வெளியிடப்பட்ட புத்தகத்திலேயே இருக்கிறதா இல்லையா ? இதை மறைக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது ?

கருணாநிதியை எதிரி என்று சொல்வதற்காகவா? கழகத்தை எதிரி என்று சொல்வதற்காகவா? என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இது மட்டுமல்ல. இன்னொரு முக்கியமான ஆதாரத்தை யும் உங்களுக்கு நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பிற்பட்ட, மிகப்பிற்பட்ட வகுப்பு மாணவர்களை உபகார சம்பள உதவிக்கு உரியவர்களா இவர்கள் என்பதை அறிய முறையே அவர்கள் ஐம்பது சதவீத மதிப்பெண்களும் நாற்பத்தைந்து சதவீத மதிப்பெண்களும் பெற்றிருக்க வேண்டும் என்ற நிலை இருந்தது.

தி.மு.கழக அரசு 1969-ம் ஆண்டு அதனை மாற்றி இந்த இரு வகுப்பினரும் உபகாரச் சம்பளம் பெற நாற்பது சதவீத மதிப்பெண்கள் பெற்றிருந்தால் போதுமென்று உத்தர விட்டேன். பிற்படுத்தப் பட்டோருக்கு ஐம்பது சதவீத மதிப் பெண்கள் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு நாற்பத்தி ஐந்து சதவீத மதிப்பெண்கள் எடுத்தால்தான் அவர்களுக்கு உபகாரச் சம்பளம் என்று இருந்தது. அதை நான் மாற்றி இரண்டு பேருக்கும் நாற்பது சதவீத மதிப்பெண்களை போதும், ஐம்பது வேண்டாம். நாற்பத்தி ஐந்து வேண்டாம். இரண்டு பேருக்கும் நாற்பது மார்க்குகள் எடுத்தால் போதுமென்று 28-6-69ல் அரசு ஆணை பிறப்பித்தேன். இதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இதோ புள்ளி விவரம் !

அது மாத்திரமல்ல. மற்றொன்றையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பின்தங்கிய சமுதாயத்தை முன்னேற்ற அரசாங்கத்தின் சார்பில் 1967-68ல் செலவழிக்கப்பட்ட தொகை நூற்றி அறுபத்தியொரு லட்சம்.

68-69ல் நூற்றி எண்பத்தி ஏழு லட்சம்
69-70ல் இருநூற்றி அறுபத்தி ஐந்து லட்சம்
70-71ல் முன்னூற்றி இருபது லட்சம்
71-72ல் முன்னூற்றி முப்பத்தி இரண்டு லட்சம்
72-73ல் நானூற்றி எண்பத்தி ஐந்து லட்சம்
73-74ல் ஐநூற்றி ஐம்பத்தி ஐந்து லட்சம்
74-75ல் அறுநூற்றி எட்டு லட்சம்

தி.மு.கழக அரசு நான் முதலமைச்சராக இருந்த பொழுது பிற்பட்டோர் நல முன்னேற்றத்திற்காக எந்த அளவிற்கு செல வழித்திருக்கிறது என்ற கணக்கை நான் இதன் மூலம் ஆதார பூர்வ மூலமாக எடுத்து வைக்க விரும்புகிறேன்.

அது மாத்திரமல்ல 1966-67ல் காங்கிரஸ் ஆட்சியின் போது பள்ளிக்கூட படிப்பில் அரசு உதவி பெற்றவர்களின் தொகை, பிற்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை பத்தாயிரத்தி முன்னூற்றி ஆறு.

72-73ல் நாங்கள் ஆண்டபொழுது இந்த உதவி பெற்ற வர்களின் தொகை ஒரு லட்சத்து நாலாயிரத்தி நானூற்றி எண்பத்தி ஆறுபேர்.

கல்லூரி படிப்பில் உதவி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 66-67ல் பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் இருபத்தியொன்னாயிரத்தி தொண்ணூற்றி ஒன்பது பேர்.

72-73ல் நாங்கள் ஆண்டபொழுது எண்பத்தி ஏழாயிரத்தி அறுநூற்றி ஐம்பத்தி இரண்டுபேர். இதற்காகவா என்னை எதிரி என்கிறீர்கள்? எப்படியடா பத்தாயிரமாக இருந்தவர் களை லட்சமாக உயர்த்தலாம். ஆகவே எங்களுக்கு எதிரி என்று சொல்கிறார்களா? எப்படியடா கல்லூரி மாணவர்கள் இருபத்தியொன்னாயிரம் பேர் என்றிருந்ததை உதவி பெற்ற

வர்களின் எண்ணிக்கையை எண்பத்தி ஏழாயிரம் பேராக உயர்த்தலாம் ஆகவே நீ எதிரி என்கிறார்களா ? எதிரி என்பதற்கு இதுதான் அர்த்தமா? ஒரு சமுதாயத்திற்காக பணியாற்றினால் எதிரி என்றால் அப்படித்தான் அகராதி சொல்கிறதென்றால் நான் எதிரிதான். அந்த எதிரி வேலையை நான் தொடர்ந்து செய்து கொண்டே இருப்பேன்.

எந்த எதிர்ப்பிற்கிடையிலேயும் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்தை, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை முன்னுக்கு கொண்டு வருகிற வேலையை என்னுடைய பிணம் கீழே விழுகிற வரையில் செய்து கொண்டே இருப்பேன். அதற்காக எதிரி பட்டம் சூட்டுவீர்களேயானால் நான் அதை மகிழ்ச்சி யாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

ஆனால் வீணாக திசை திருப்பாதீர்கள்! தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, காயிதே மில்லத், அம்பேத்கார், காந்தியடிகள் போன்றோர்களெல்லாம் எதற்காக பாடுபட்டார் களோ அவர்களைத் தொடர்ந்து நாங்கள் அதற்காக பாடுபடு கிறோம் என்பதை மறந்து விடாதீர்கள்.

வெளிப்படையாக கூறுங்கள் விட்டுக் கொடுக்கிறோம்!

கேவலம் ஒரு தேர்தலுக்காக ஜாதிக் கலவரத்தை உருவாக்குகிறீர்கள். இந்தியாவிலே எங்கெங்கோ ஜாதிக் கலவரம், மதக்கலவரம், இனக்கலவரம் நடைபெற்றதுண்டு. ஆனால் பெரியார், அண்ணா, காயிதேமில்லத் போன்றோர் பிறந்த இந்த மண்ணில் மதக்கலவரங்களுக்கு நாம் இடம் தந்த தில்லை, ஜாதிக்கலவரம் அங்கொன்று இங்கொன்று நடந் திருக்கும். அதை அனைவரும் ஒன்று சேர்ந்து அமைதிப் படுத்துவதில் ஈடுபட்டிருக்கிறோம்.

ஆனால் இன்றைக்கு அதைக் கிளறி விடுகிறவர்கள் அந்த நெருப்பில் குளிர் காய்கிறார்கள். ஜாதிக் கலவரத்தால்

ஏற்படுகிற தீ மேலும் மேலும் எரிந்து அதன் காரணமாக தமிழ் நாட்டை இன்றைக்கு சீர்குலைக்க எண்ணுகிறவர்கள் யார்?

கேவலம் தேர்தலுக்காக இப்படிச் செய்யலாமா? காங்கிரஸ் காரர் தான் முதலமைச்சராக வர வேண்டும்; இல்லாவிட்டால் தமிழ்நாட்டில் நாங்கள் கலவரம் செய்தே தீருவோம்; ரத்த ஆறு ஓடும். தமிழர்களின் பிணம் விழும். வீடுகளைக் கொளுத்து வோம். ஜாதிச் சண்டைகள் தெருவிற்குத் தெரு நடைபெறும் என்று வெளிப்படையாகச் சொல்லி விடுங்கள். நாங்கள் தேர்தலுக்கு நிற்கவில்லை. எங்களுக்கு தேர்தல் பெரிதல்ல. பதவி பெரிதல்ல. தமிழ்நாடு அமைதியாக இருக்க வேண்டும். அதற்காக ஜாதிக் கலவரங்களை ஏற்படுத்தாதீர்கள். மதக் கலவரங்களை ஏற்படுத்தாதீர்கள். உங்களை ஜெயிக்க வைக்க நாட்டு மக்கள் தயாராக இல்லை என்றால் உங்களை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்த நாட்டு மக்கள் விரும்பவில்லையென்றால் அதற்கு நாங்களா பொறுப்பு?

— ★ —

பல்கலைப் புலவர்,
தமிழ்த் "கா.சு" நினைவு இலக்கியக் குழு,
சுவரவடிவுநகம் - உடுக்கலை,
திருப்பூர் மாவட்டம். 639 104.

